ing that market. Is it not a fact that some years ago there was a proposal to transfer this market to a more spacious area with all modern methods of hygiene and convenience? Even if this Government do not have such a proposal now, will this Government at least take stock of the situation and see that something is done immediately to solve this vexatious problem?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கொத்தவால் சாவடிப் பகுதியில் நெருக்கடி இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருகிறது. என்றாலும் அது எந்தெந்த வகையில் தீர்க்கப் படும் என்பதற்கு, அங்கே சுகாதார வசதிகள் மற்றவைகள் செய்வதற்கு மாநகராட்சி முடிந்த அளவு செய்து வருகிறது. மற்ற விவரங்கள் தற்போது குறிப்புகளில் எதுவும் இல்லை. ஆகவே, தனியாக இதுபற்றிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: கொத்தவால்சாவடி இப்போது இருக்கும் இடத்தில் இருப்பது நல்லது. பல இடங்களிலிருந்தும் வருவதற்கு அருகில் பஸ் ஸ்டாண்டு வசதி இருக்கிறது. சுகாதாரத்தை மட்டும்தான் கவனிக்க வேண்டும். இடத்தை மாற்றக்கூடாது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே குறிப்பிட்டது போல் பதில் இல்லை.

திரு. கே. விநாயகம்: முன்பு ஒரு முறை இந்த மார்க்கெட்டுகள் சீரமைப்புக் கமிட்டி என்று சொல்லி திரு. வி. வி. ராமசாமி, எம்.பி. இந்த மார்க்கெட்டுகளைப் பார்த்த பிறகு கொத்தவால் சாவடி மார்க் கெட்டை பேசின் பிரிட்ஜ் அருகாமையில் இருக்கும் இடத்திற்கு மாற்ற சிபார்சு செய்தது. அதை, அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதை அமுல் படுத்துவதற்கு இப்போது ஏன் தாமதம்? இதனால் என்ன செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஏற்கெனவே, திரு. ஹாண்டே அவர்களுக்குக் கூறியது போல், இது பற்றிய விவரங்கள் எதுவும் இல்லாததால் விளக்கம் சொல்ல முடியவில்லை.

வங்கிகள் மூலம் வீடுகள் கட்டுதல்

*56 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வங்கிகள் மூலம் வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.

1970 ஆகஸ்ட் 26]

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் வீடில்லாத பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருக்கிறது. உணவு பிரச்சினையில், நடவடிக்கை எடுத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருப்பதைப்போல இந்த வீட்டுப் பிரச்சனைக்கும், ஒரு சிறப்புத் திட்டத்தை அமுல் படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, வீட்டு அடைமான வங்கிகள் வீடு கட்டக் கடன்கள் கொடுக்கிறார்கள். வீடு கட்டுவது, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் இவை என்னுடைய சகா, அறநிலைய அமைச்சர் நிர்வாகத்தில் இருக்கின்றன.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய்களை வீடு கட்டுவதற்கு என்று ஒதுக்கி வைக்கிறார்கள். அந்தப் பணத்தை நம்முடைய அரசு உபயோகிக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அந்தச் சுழல்நிதி பற்றிச் சொல்கிறார்கள். அதில் 200 கோடி ரூபாய் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது பற்றி தனியாகக் கேட்டால், அறநிலைய அமைச்சர் பதில் கூறுவார்கள்.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, பொதுவாகக் கிராமப் பகுதிகளில், வீடுகள் இல்லாமல் அவதிப்படுவதால், அதற்கும் நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நில வள வங்கி நிலத்தைத்தான் வளமாக்க உதவும். வீடு கட்டுவது, வீட்டு வளவங்கிகள்தான் செய்ய முடியும். (சிரிப்பு)

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்த வங்கிகள் சில கட்சிகளையும் வளமாக்குகின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(பதில் இல்லை.)

தூத்துக்குடியிலுள்ள அரசினர் நிலங்கள்

*57. வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் சர்க்காருக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கரா பூமி, தனிப்பட்ட ஒருவருக்கு வருடம் ஒன்றுக்கு ஏக்கரா ஒன்றுக்கு 75 பைசா வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகளுக்கு?

(உ) குத்தகைக் காலம் முடிந்து விட்டதா?

(எ) ஆம் என்றால், மேலும் நீடிக்கும் உத்தேசமுண்டா?